நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தென்னையில் ஊடுபயிர் சாகுபடி**

First Published : 29 Apr 2010 04:52:46 AM IST

Last Updated : 29 Apr 2010 09:06:00 AM IST

சங்ககிரி, ஏப்.28:இரு தென்னை மரங்களுக்கு இடையில் போதுமான சூரிய ஒளி கிடைப்பதால், தென்னந்தோப்புகளில் ஊடுபயிர் செய்ய ஏற்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே விவசாயிகள் ஊடுபயிர் செய்து பலன் பெறலாம் என வேளாண் உதவி இயக்குநர் ப.செப்ந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

÷மேலும் அவர் கூறியது:

÷தென்னை பல வருட பயிராகும். தென்னையில் ஊடுபயிர் செய்வதால் களைகளை கட்டுப்படுத்தி, இடைவெளியை முறையாக பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்க ஏதுவாகிறது.

÷இளம் வயது தென்னையில் ஊடுபயிராக (நட்டதிலிருந்து 7 ஆண்டுகள் வரை) மக்காச்சோளம், மஞ்சள், மரவள்ளி, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, சேனைக்கிழங்கு, நிலக்கடலை, எள், காய்கறிகள், பருத்தி, பயறு வகைகள், சோயா மொச்சை ஆகியவற்றை பயிரிடலாம்.

÷நடுத்தர வயது தென்னையில் (7முதல் 20 ஆண்டுகள் வரை) பசுந்தாள் உரப்பயிரான சணப்பு பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்யலாம். இதனால் மண்வளம் கூடும்.

÷வளர்ந்த தென்னந்தோப்பில் (20 ஆண்டுகளுக்கு மேல்) வாழை, கோகோ, அன்னாசி, மஞ்சள், வெண்டை, சேனைக்கிழங்கு, செண்டுமல்லி, மிளகு மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களை பயிரிடலாம்.

÷இவ்வாறு தென்னையில் அதன் வயது, மண்ணின் தன்மை, பாசன நீரின் தரம் போன்றவற்றை பொருத்து ஊடுபயிரினை தேர்வு செய்து பயிர் செய்வதால் மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன் உபரி வருமானமும் கிடைக்கிறது. மேலும், களைகள் வளர்வதும் வெகுவாக கட்டுப்படுத்தப்படுகின்றது என கூறினார்

**சீனித்துளசி பயிரிடலாம்; லாபம் பெறலாம்**

First Published : 29 Apr 2010 12:00:00 AM IST

சிதம்பரம், ஏப். 28: இயற்கையின் பலவிதமான அற்புதங்களில் சீனித்துளசி தாவரம் மிகவும் முக்கியமான மருத்துவ தாவரமாக திகழ்கிறது. சீனித்துளசி கரும்பு சர்க்கரையை விட 30 மடங்கு அதிகமாக இனிப்புச் சுவையை கொண்டிருந்தாலும், சர்க்கரை நோயாளிகளுக்கு மருந்தாக பயன்படுவது ஆச்சரியமளிக்கிறது.

நீரிழிவு நோயாளிகள் சர்க்கரையை உபயோகிக்க முடியாத நிலையில் இந்த சீனித்துளசியிலிருந்து பெறப்படும் சர்க்கரையை உபயோகிக்கலாம்.

இத்தகைய சீனித்துளசியை விவசாயிகள் வளர்த்தால் தங்களது முதலீட்டைப் போல இருமடங்கு வருமானம் தரக்கூடியதாகும்.

ஸ்டீவியா எனப்படும் இந்த சிறுசெடி பராகுவே நாட்டைச் சேர்ந்ததாக இருந்தாலும் உலக நாடுகள் பலவற்றிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தமிழக விவசாயிகள் சீனித்துளசியை விவசாய நிலங்களிலும், வீட்டுத் தோட்டங்களிலும் எளிதாக குறைந்த செலவில் வளர்த்து அதிகளவு லாபம் பெறலாம்.

சாகுபடி குறிப்புகள்: சீனித்துளசி பயிரிடுவதற்கு ஒப்பந்த சாகுபடி முறை மிகவும் பாதுகாப்பானதாகும். சீனித்துளசி ஒரு மித வெப்பமண்டல பயிராகும்.

நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண்ணில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. உவர்ப்பு தன்மை தாங்கி வளரும் தன்மை இல்லாததால், தண்ணீர் தேங்கியுள்ள விவசாய நிலங்களில், போதிய வடிகால் வசதி இல்லாத நிலங்களில் சீனித்துளசியை சாகுபடி செய்ய முடியாது.

விவசாயிகள் நிலத்தை தேர்வு செய்த பின்பு நன்றாக உழுது ஏக்கருக்கு 20 டன்கள் வரை தொழுஉரம் இட்டு மீண்டும் ஒருமுறை நன்றாக உழவும் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

மேட்டு பாத்திகளில் 23-20 செ.மீ. இடைவெளியில் நடவு செய்யும்போது ஒரு ஏக்கருக்கு 44 ஆயிரம் செடிகள் வரை தேவைப்படும்.

பொதுவாக சீனித்துளசி தண்டுக்குச்சிகள் மூலம் இனம்பெருக்கம் செய்யப்படுகிறது.

ஒரு ஏக்கருக்கு 24:12:18 கிலோ என்ற அளவில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து இடுதல் வேண்டும். அடியுரமாக பாதியளவும், தழைச்சத்தையும், முழு அளவு மணி மற்றும் சாம்பல் சத்துகளை பயிருக்கு தர வேண்டும். பின்னர் முதல் அறுவடைக்கு பிந்தைய காலக்கட்டத்தில் மீதிபாதி தழைச்சத்தை நுண்ணூட்ட சத்துக்களான போரான் மற்றும் மாங்கனீசு ஆகியவற்றை சேர்த்து வழங்க வேண்டியது அவசியம்.

சீனித்துளசியின் மகசூலை அதிகரிக்க முதல் களையெடுத்தல் பணிகளை நடவு செய்த ஒரு மாதத்துக்குப் பின்பும், அதன் பின் 20 நாள்களுக்கு ஒரு முறையும் களை நீக்கம் செய்வது பயிரின் வளர்ச்சிக்கு நன்மை தரும்.

சீனித்துளசி இலைகளில் ஸ்டீவியோசைடு வேதிப்பொருள் அதிகளவு காணப்படுகிறது.

செடிகள் அதிகமாக பூப்பூக்கும் வரை ஸ்டீவியோசைடு இலைகளில் அதிகமாக காணப்படும். இலைகளின் வளர்ச்சியை பெருக்க நடவு செய்த பின் 30, 45, 60, 75 மற்றும் 85 நாள்களிலும் மற்றும் அறுவடையின் போது பூக்களை அகற்றிவிடுவது அவசியம்.

சீனித்துளசியை அதிகமாக நோய் மற்றும் பூச்சிகள் தாக்குவது கிடையாது. சீனித்துளசியை நடவு செய்த 4,5 மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். அடுத்தடுத்த அறுவடைகளை 3 மாதங்களுக்கு ஒருமுறை என்று 3 ஆண்டுகள் வரை தொடர்ந்து அறுவடை செய்து லாபம் பெறலாம்.

அறுவடையின்போது அடிபாகத்திலிருந்து 10 செ.மீ. உயரம் வரை விட்டுவிட்டு மேல்பகுதியை வெட்டி எடுக்க வேண்டும்.

இதன் பிறகு வரும் இலைகள் 3 மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும்.

ஏக்கருக்கு ஒரு அறுவடையில் 1 முதல் 1.2 டன்கள் வரை உலர் இலைகளை அறுவடை செய்யலாம். ஆண்டுக்கு 4.48 டன் வரை உலர் இலைகள் கிடைக்கும்.

வணிக வாய்ப்புகள்: சீனித்துளசி முதல் ஆண்டில் ஒரு ஏக்கருக்கு ஒன்றரை லட்சம் ரூபாயும், அடுத்த ஆண்டுகளில் குறைந்த செலவில் ரூ.2 லட்சம் வரையும் வருமானத்தை பெற்றுத்தரும்.

தற்போது உள்நாட்டு சந்தையில் சர்க்கரைக்கு நல்ல மாற்றாக உள்ள சீனித்துளசி விலை போகிறது.

சீனித்துளசி இலைகளை உலர வைத்து பொடி செய்து இனிப்பு வகைகள், குளிர்பானங்கள், பழச்சாறுகள், ஊறுகாய்கள், ஜாம் ஆகிய பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்வு சந்தைகளில் அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது.

எனவே தமிழக விவசாயிகள் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் அதிக லாபம் தரும் சீனித்துளசி சாகுபடியில் ஈடுபட்டு வாழ்வில் வளம் பெறலாம் என்கிறார் அண்ணாமலைப் பல்கலை. வேளாண் பொருளாதாரத்துறை முனைவர் கே.ஆர். சுந்தரவரதராஜன்.

**வெள்ளரி ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் லாபம்**

First Published : 29 Apr 2010 12:00:00 AM IST



பண்ருட்டி, ஏப்.28: ஒரு கிலோ வெள்ளரி விதை ரூ.100 வரை விலை போவதால் ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை நிகர லாபம் கிடைப்பதாக வெள்ளரி சாகுபடி செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் கூறினர்.

பண்ருட்டி வட்டத்தில் சிறுவத்தூர், வையாபுரிபட்டணம், ஏரிப்பாளையம், அங்குசெட்டிப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமத்தில் 50-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெள்ளரி சாகுபடி செய்யப்படுகிறது. வெள்ளரி பிஞ்சுகள் பச்சையாகவும், சமைத்தும் சாப்பிடப்படுகிறது. இதன் பழங்களை நேரடியாகவும், சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றுடன் கலந்து சாப்பிட்டால் மிக சுவையாக இருக்கும். பிஞ்சாகவும், பழமாகவும் பயன்படும் வெள்ளரி கோடைக் காலத்துக்கு ஏற்ற மருத்துவ குணம் கொண்ட சிறந்த உணவாகும்.

பண்ருட்டி பகுதி விவசாயிகள் விதை எடுப்பதற்காகவே வெள்ளரி சாகுபடி செய்கின்றனர். இது குறித்து சிறுவத்தூர் வெள்ளரி விவசாயி தியாகராஜன் கூறியது: வெள்ளரி 3 மாத பயிர். வெள்ளரி பிஞ்சுகளை அறுவடை செய்வதில்லை. வெள்ளரி பழத்தில் உள்ள விதைதான் எங்கள் முக்கிய இலக்கு.

இந்த விதைகளை சுத்தம் செய்து இனிப்பு மற்றும் பாக்கு கலவையில் பயன்படுத்தப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் விதைகளை தண்ணீரில் அலசி காயவைத்து வைத்தால் வியாபாரிகள் வீட்டில் வந்தே வாங்கி செல்கின்றனர். ஒரு ஏக்கருக்கு 150 கிலோ விதை கிடைக்கும். விதை விற்பனை மூலம் ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரை நிகர லாபம் கிடைக்கிறது.

விதை நீக்கப்பட்ட வெள்ளரிப் பழம் ஒன்று ரூ. 2 முதல் 4 வரை விலை போகும். இதை வெள்ளரி பழ வியாபாரிகள் தோட்டத்தில் வந்து வாங்கி செல்வர். இல்லை என்றால் தோட்டத்திலேயே போட்டு விடுவோம். பழம் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் தோட்ட பராமரிப்பு, மருந்து மற்றும் ஆள் கூலி உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்டிவிடும் என்றார் தியாகராஜன்.

**நஞ்சை தரிசில் எள் சாகுபடி**

First Published : 29 Apr 2010 05:51:03 AM IST

மதுரை, ஏப்.28: தற்போது மதுரை மாவட்டத்தில் நெல் அறுவடைப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டம், வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பகுதிகளில் நெல் அறுவடைக்குப் பின் நஞ்சை தரிசில் சுமார் 600 ஹெக்டர் பரப்பில் குறைந்த வயதுடைய (அதாவது) 70 முதல் 75 நாள்கள் எள் பயிர் பொதுவாக பயிரிடப்பட்டு வருகிறது.

நெல் அறுவடை முடிவுற்றதும், வயலில் உள்ள ஈரப்பதத்தைக் கொண்டு, சூழ்நிலைக் கேற்றவாறு மானாவாரியாகவோ அல்லது பாசன வசதியுள்ள இடங்களில் இறவையாகவோ எள் பயிரிடலாம். எள் விளைந்த இடத்தில் கொள்ளுகூட விளையாது என்பது தவறான கருத்து. மாறாக அது தனக்குத் தேவையான சத்தினை மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

நஞ்சை தரிசுக்கு டி.எம்.வி. 3 என்ற ரகம் மிகச் சிறந்தது. அதிக பக்க கிளைகளுடன் ஹெக்டோருக்கு 650-750 கிலோ மகசூல் தரவல்லது. கோ-1 ரகம். அதிக கிளையுடன் நேராக வளரக்கூடியது. ஹெக்டேருக்கு 800 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

ஏற்றுமதிக்கேற்ற வெள்ளை எள் ரகமான எஸ்விபிஆர்-1 ரகம் அதிக காய் எண்ணிக்கையுடன், அதிக எண்ணெய்ச் சத்துடன் ஹெக்டேருக்கு 800 கிலோ வரை மகசூல் தரக்கூடியது. எந்த வகை மண்ணிலும் இதைப் பயிரிடலாம். விதைக்கும் முன் மண் ஆய்வு செய்து அதன்படி உரமிட வேண்டும். நல்ல முளைப்புத்திறன் கொண்ட சான்று விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

விதைக்கும்போதும், விதைத்த 7-ம் நாள், 25-வது நாளில் பூக்கும் தருணம் மற்றும் காய்பிடிக்கும் தருணம் ஆகிய 4 முறை தண்ணீர் பாய்ச்சினாலே போதும். அதிக மகசூல் அடையலாம்.

எனவே மதுரை மாவட்ட விவசாயிகள், நெல் வயலில் அறுவடைக்குப் பின் தரிசில் எள் பயிரிட்டு உயர் லாபம் அடையலாம் என்று மதுரை வேளாண்மை இணை இயக்குநர் ப.சங்கரலிங்கம் தெரிவிக்கிறார்.

**செயற்கை கடல் விரால் மீன் உற்பத்தி: மண்டபம் விஞ்ஞானிகள் சாதனை**

First Published : 29 Apr 2010 05:46:04 AM IST

Last Updated : 29 Apr 2010 09:16:53 AM IST

ராமேசுவரம், ஏப். 28: இந்தியாவில் முதல்முதலாக செயற்கை முறையில் கடல் விரால் எனும் கோபியா மீனை மண்டபம் கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் உருவாக்கி, புதன்கிழமை கடல் கூண்டுகள் விட்டனர்.

கடல் விரால் எனும் கோபியா மீன் வங்காள விரிகுடாவில் ஆழ்கடலில் அதிகமாகக் காணப்படும். இந்த மீன்கள் சீலா மீன்கள் போன்று அதிகச் சுவை கொண்டதாகவும், மற்ற மீன்களை விட வேகமாகவும் வளரக் கூடியவை. இந்த கோபியா மீன்கள் மீனவர்கள் வலையில் சிக்குவது அரிதாக உள்ளது.

அதனால் இந்த மீன்களைச் செயற்கையாக இனப்பெருக்கம் செய்து குஞ்சுகளைப் பொரிக்க வைக்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதல்முறையாக மண்டபம் கடல் மீன் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கடந்த 2008-ம் ஆண்டு முதல் முயற்சித்தனர்.

அதன்படி, 2 ஆண்டுகளுக்குப் பிறகு இருபால் கோபியா மீன்களில் இருந்து உருவான 5 ஆயிரம் மீன் குஞ்சுகளை மிகவும் பாதுகாப்புடன் செயற்கை முறையில் தொட்டியில் வளர்த்தனர்.

இதில் சுமார் 500 மீன் குஞ்சுகளை மட்டும் புதன்கிழமை கடலில் உள்ள மீன் கூண்டுக்குள் விஞ்ஞானிகள் விட்டு சாதனை படைத்தனர்.

இதுகுறித்து மண்டபம் கடல் மீன் ஆராய்ச்சி நிலையப் பொறுப்பாளர் விஞ்ஞானி ஜி. கோபக்குமார் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

கோபியா எனும் கடல் விரால் மீனை சீனா, தைவான், வியத்நாம் நாடுகளுக்குப் பிறகு, செயற்கை முறையில் இந்தியாவிலேயே முதல்முறையாக மண்டபம் கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கினோம்.

இந்த மீன்கள் 45 நாள்களுக்கு ஒருமுறை சுமார் 15 லட்சம் முட்டைகளை இடும் தன்மை கொண்டவை.

அதன் முட்டைகள், சிறிய குஞ்சுகளை உணவாக கோபியா மீன்கள் உட்கொள்ளும். அதனால் முட்டையிட்டவுடன் பெரிய மீனைத் தனியாகப் பிரித்து விடுவோம்.

மீன் குஞ்சுகளுக்குப் பிரத்யேகமான உணவு வழங்கி உருவாக்கினோம்.

இந்த மீன் ஒரு வருடத்துக்கு சுமார் 5 முதல் 8 கிலோ வரையும், இரண்டாவது ஆண்டில் 20 முதல் 30 கிலோ வரையும் வளரக் கூடியவை.

இந்த மீன்கள் உள்நாட்டுச் சந்தையில் கிலோ ரூ. 200 வரை விற்கப்படுவதால், மீனவர்களுக்கு கோபியா மீன் வளர்ப்பு பெரிய லாபமான தொழிலாக இருக்கும்.

இம் மீன் ஆராய்ச்சி தற்போது துவக்க நிலையில் உள்ளதால், இதனைச் செயற்கை முறையில் தனியார் அமைப்பு அல்லது மீனவர் குழுவினரிடம் கொடுத்து வளர்க்கும் திட்டம் ஏதும் இல்லை.

தற்போது செயற்கைக் கூண்டில் விடப்பட்ட கோபியா மீன் குஞ்சுகளின் வளர்ச்சி குறித்த ஆய்வில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளதாகவும் கோபக்குமார் தெரிவித்தார்.

**6 வட்டார விவசாயிகளுக்கு மழைக்காப்பீட்டுத் திட்ட நஷ்ட ஈடு: வேளாண் காப்பீடு நிறுவனம் அறிவிப்பு**

First Published : 29 Apr 2010 01:29:12 AM IST

Last Updated : 29 Apr 2010 09:18:19 AM IST

சிவகங்கை, ஏப். 28: சிவகங்கை மாவட்டத்தில் மழைக்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்த 6 வட்டார விவசாயிகளுக்கு நஷ்டஈட்டுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய வேளாண்காப்பீடு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

2009-ம் ஆண்டு வர்ஷபீமா என்ற மழைக்காப்பீட்டுத் திட்டத்தை மத்திய அரசின் வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிவித்தது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் 6 மாவட்டங்களைச் சேர்ந்த 9370 விவசாயிகள் சேர்ந்தனர். இதில் 5456 விவசாயிகளுக்கு ரூ2.39 கோடி நஷ்டஈடு வழங்கப்பட இருக்கிறது. குறைந்த அளவு மழை, கூடுதல் மழை, தொடர் வறண்ட தினங்கள் ஆகியவற்றை கணக்கிட்டு நஷ்ட ஈடு விகிதம் இத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் 2009 செப். 15 முதல் டிசம்பர் 31 வரை குறைந்த அளவு மழையும், செப்டம்பர் 15 முதல் நவம்பர் 15 வரை தொடர் வறண்ட தினங்களும், செப்டம்பர் 15 முதல் 2010 ஜனவரி 31 வரை கூடுதல் மழை அளவும் கண்காணிக்கப்பட்டு திட்டங்களில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு நஷ்ட ஈடு தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சிவகங்கை மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கான நஷ்டஈட்டுத் தொகை விவரம் வருமாறு: கண்ணங்குடி வட்டாரத்துக்கு ரூ.750, காளையார்கோவில்,கல்லல் வட்டாரங்களுக்கு ரூ.1250, இளையான்குடி வட்டாரத்துக்கு ரூ.750, தேவகோட்டை வட்டாரத்துக்கு ரூ.1253, திருப்பத்தூர் வட்டாரத்துக்கு ரூ.1250.

ஏனைய வட்டாரங்களுக்கு நஷ்டஈடு திட்டத்தில் இல்லை. மேற்கண்ட நஷ்டஈடானது மே மாதம் விவசாயிகளின் முகவரிக்கு காசோலையாகவோ, வரைவோலையாகவோ வழங்க ஏற்பாடு செய்யப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**வேளாண் பல்கலைபேராசிரியருக்கு விருது**

கோவை: சர்வதேச அக்ராலாஜி நாளிதழ் சார்பில் தமிழ்நாடு வேளாண் பல்கலை பூச்சியியல் துறை பேராசிரியர் ராமராஜூக்கு, சிறப்பு அங்கீகார விருது வழங்கப் பட்டுள்ளது.

---

இங்கிலாந்தில் ஆக்சான் நகரில் உள்ள டெய்லர் மற்றும் பிரான்சிஸ் நிறுவனம் சர்வதேச அக்ராலாஜி நாளிதழை வெளியிடுகிறது. இந்நாளிதழ் சார்பில், பயிர்களை தாக்கும் சிலந்திகள் மற்றும் பூச்சிகளில் இருக்கும் ஒட்டுண்ணி சிலந்திகள், அவற்றின் இனவகைகள் குறித்து இந்தியாவில் பெருமளவு ஆராய்ச்சி செய்ததற்காக இவ்விருது வழங்கப் பட்டுள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள வேளாண் பல்கலையில் நடந்த அக்ராலாஜி கருத்தரங்கில் இவ்விருது வழங்கப்பட்டது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலை விஞ்ஞானி ஒருவருக்கு முதல்முறையாக இவ்விருது வழங்கப் பட்டுள்ளது. இவர், பூச்சி மற்றும் சிலந்தி இனங்களை வகைப்படுத்துதல் மற்றும் முக்கிய பயிர்களை தாக்கும் சிலந்திகள், சிலந்தி இனங்களை வகைப்படுத்துதல் மற்றும் முக்கிய பயிர்களை தாக்கும் சிலந்திகள், அவற்றின் மேலாண்மை குறித்து ஆராய்ந்து வருகிறார்.

பூச்சி மற்றும் சிலந்தி இனங்களை வகைப்படுத்தல் குறித்த ஆராய்ச்சி திட்ட முதன்மை ஆய்வாளராக உள்ளார். மத்திய அரசின் உயிர் நுட்பவியல் துறை, காய்கறிகளை தாக்கும் பயிர் சிலந்திகளை உயிரியல் முறையில் பூஞ்சாணங்களை கொண்டு கட்டுப்படுத்தல் குறித்த ஆராய்ச்சி திட்டத்துக்கு,நிதியுதவி பெற்றுள்ளார்.

**சூறாவளியால் விவசாய பயிர்கள் நாசம் கிணத்துக்கடவு விவசாயிகள் சோகம்**

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு, சொலவம்பாளையம், அரசம்பாளையம், தேவராடிபாளையம் போன்ற கிராமங்களில் நேற்று முன் தினம் ஏற்பட்ட சூறாவளி காற்றில், தென்னை, வாழை மரங்கள் பெருத்த சேதம் அடைந்துள்ளதால், விவசாயிகள் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.சூறாவளியால் 20 தென்னை மரங்கள், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் மற்றும் கிணத்துக்கடவு துணை கருவூல அலுவலகம் அருகே இருந்த கொன்றைமரம், சொலவம்பாளையம் பகுதியில் உள்ள புளியமரம் வேரோடு சாய்ந்து விழுந்தது.தேவராடிபாளையம் கிராம தோட்டத்தில் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் புதிதாக போடப்பட்ட கோழிப்பண்ணை செட்டின் மேற்கூறையில் போடப்பட்ட சிமெண்ட் சீட்டுகளை காற்று தூக்கி சென்றுவிட்டது.மேலும், கிணத்துக்கடவு விவசாயி மணி. இவரது தோட்டத்தில் போடப்பட்ட 1,500 நேந்திரன் வாழை, 2 தென்னை மரங்களும், முறிந்து விழுந்து சேதமடைந்துள்ளது. இதனால், விவசாயிகள் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.கிணத்துக்கடவு கிராமம் முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வீடுகளும் சேதமடைந்துள்ளது. சாலைப்புதூர் இடத்தில் மூன்று மின் கம்பங்கள், சொலவம்பாளையம் பகுதியில் நான்கு மின்கம்பங்கள், அரசம்பாளையம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலக முன்பு இருந்த மின் கம்பங்கள் கீழே சரிந்ததால், மின் வினியோகம் துண்டிக் கப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் நேற்று முதல் மின் வினியோகம் இல்லை.பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தோட்டங்களையும், சேதமடைந்த வீடுகளையும், வருவாய்துறையினர் கணக்கெடுத்து வருகின்றனர். இதனால், விவசாயிகளும், பொதுமக்களும், நிவாரண தொகை கிடைக்குமா? என்று எதிர்பார்க்கின்றனர்.இதற்கு, வருவாய்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளும், பொதுமக்களும் எதிர் பார்க்கின்றனர்.

**பொள்ளாச்சியில் சூறாவளி 3,000 நேந்திர வாழை சரிந்தன : விவசாயிகள் சோகம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சியில் மழையுடன் சூறாவளி காற்று வீசியதில் மூவாயிரம் நேந்திரன் வாழைமரங்களும், தென்னை மரங்களும் சாய்ந்தன.பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் ஏப்., 27ம் தேதி மாலை இடி, மின்னலுடன் மழை பெய்தது. சூறாவளி காற்று வீசியதால் ரோட்டோரத்தில் இருந்த மரங்கள் பெயர்ந்தும், முறிந்தும் விழுந்ததில் மின் கம்பங்கள் சாய்ந்து மின்தடை ஏற்பட்டது. மரம் விழுந்ததால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.பொள்ளாச்சி அருகே மாக்கினாம்பட்டியில் பலத்த காற்று வீசியதால் தனியார் தொழிற்சாலை மேற்கூரை பறந்து ரோட்டில் விழுந்தது. அதே கிராமத்தில் வாழைமரங்கள் சூறாவளி காற்றால் பாதிக்கப்பட்டன.
சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த வாழைமரங்கள் குலைகளுடன் சரிந்தது. தென்னை மரங்களும்

அதிகளவில் முறிந்து விழுந்துள்ளது.

வாழை விவசாயி துரை கூறியதாவது:ஐந்து ஏக்கரில் நேந்திரன் வாழை சாகுபடி செய்து, வாழைத்தார் அறுவடைக்கு தயாராக உள்ளது. நேற்று முன்தினம் இரவு பலத்த சூறாவளி காற்று வீசியதால் வாழைமரங்கள் அனைத்தும் சாய்ந்து விட்டன.மொத்தம் மூவாயிரம் நேந்திரன் வாழையும் சாய்ந்து விட்டது.இதனால், ஆறு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும்.இவ்வாறு, விவசாயி துரை தெரிவித்தார்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் மற்றும் கிணத்துக்கடவு, நெகமம் பகுதியில் தென்னை மரங்கள் முறிந்து விழுந்ததையும் கணக்கெடுத்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**மானிய விலையில் நெல், உளுந்து விதைகள்**

பண்ருட்டி : பண்ருட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் நெல், உளுந்து விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது.

பண்ருட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் ஏ.டி.டி., 45 ரகம் நெல் 50 சதவீத மானிய விலையில் ஒரு கிலோ 9 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டி.எஸ்., உளுந்து ரகம் 50 சதவீத மான்யவிலையில் 55 ரூபாய்க்கும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஜிப்சம் உரம் 400 கிலோ 1,220.80ல் மானியம் 750 போக 471 ரூபாய்க்கும், சிங்க்கல் பேட் ஒரு கிலோ 33.30க்கு மானிய விலையில் 17.30 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பூச்சிக் கொல்லி மருந்து அசாடிராக்டின் இரண்டரை லிட்டர் 268ல் இருந்து மானியம் 128 போக 140க் கும், பாசிலஸ் துரிஞ்சி அரை  லிட்டர் 379க்கும் 189 போக 190 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு பவர் டில்லர் வழங்கல்**

தர்மபுரி: தர்மபுரி தாலுகா ஒட்டஅள்ளி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர் வழங்கப்பட்டது. ஒட்டஅள்ளி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் டிராக்டர் கடன்கள் வழங்கப்பட்டது. எம்.ஒட்டப்பட்டியை சேர்ந்த விவசாயி குமரேசனுக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் மதிப்புள்ள (ஒரு லட்சத்து 25 ஆயிரம் மானியம்) மினி டிராக்டர், மூக்கனூரை சேர்ந்த மணி மற்றும் எம்.ஒட்டப்பட்டியை சேர்ந்த சேட்டு ஆகியோருக்கு தலா ஒரு லட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் (45,000 ரூபாய் மானியம்) பவர் டில்லரை தர்மபுரி மண்டல ட்டுறவு இணைப்பதிவாளர் பாஸ்கரன் வழங்கினார்.தர்மபுரி சரக துணை பதிவாளர் ஆனந்தி, கிருஷ்ணகிரியை சேர்ந்த துரை மோட்டார்ஸ் உரிமையாளர் துரை, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் முனியப்பன், இணை பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் கர்ணன், கள மேலாளர் கிருஷ்ணன், சரக மேற்பார்வையாளர் ராமச்சந்திரன், சங்க செயலாளர் சங்கர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**முதல்போக சாகுபடிக்கு ஏ.டி.டி., 16 ரக நெல் தட்டுப்பாடு**

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதியில் முதல்போகத்தில் சாகுபடி செய்யப்படும் ஏ.டி.டி., 16 ரக விதை நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் முதல்போக சாகுபடிக்காக 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

இதையடுத்து விவசாயிகள் சாகுபடிக்காக நிலத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டனர். இப்பாசனப் பகுதியில் முதல் போகத்தில் 'இட்லி குண்டு' எனப்படும் ஏ.டி.டி., 16 ரக விதை நெல்லை விவசாயிகள் அதிகளவில் பயிரிடுவர். இந்த

ரகத்தை பூச்சி தாக்க வாய்ப்பில்லை. நல்ல மகசூலை கொடுக்கும் இந்த ரகம், மழை மற்றும் பலமான காற்றடிக்கும் ஻லங்களில் சாயாது. கோபி பகுதியில் விளையும் ஏ.டி.டி., 16 நெல்லுக்கு கேரள மாநிலத்தில் நல்ல மவுசு உண்டு. இதனால், கோபி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஏ.டி.டி., 16 ரக விதை நெல்லை முதல் போகத்தில் பல ஆண்டுகளாக பயிரிட்டு வருகின்றனர்.

நடப்பாண்டு கோபி வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் ஏ.டி.டி., 16 ரக விதை நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில தனியார் உரக்கடைகளில் ஏ.டி.டி., 16 ரக நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்து கோபி வேளாண் உதவி இயக்குநர் ஆசைதம்பி கூறியதாவது:
சென்றாண்டு முதல் போகத்தில் ஏ.டி.டி., 16 ரக நெல்லை பயிரிடுவதில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும் நடப்பாண்டு அரசு விதிமுறைப்படி 17 முதல் 21 சதவீதம் வரை பல்வேறு வகையான விதை நெல் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. குறிப்பாக விவசாயிகள் விரும்பி கேட்டதால் ஏ.டி.டி., 16 விதை நெல்லை, விருதுநகரில் இருந்து கூடுதலாக ஏழு டன் வரவழைத்து கோபி மற்றும் டி.என்.பாளையம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.
தற்போது ஏ.டி.டி., 36, 43, 45, ஆகிய விதை நெல் ரகங்கள் கோபி மற்றும் கூகலூர் வேளாண் விரிவாக்க மையங்களில் 14 டன் இருப்பு உள்ளது. மேலும் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசன பகுதிகளை சேர்ந்த கூகலூர், சவுண்டப்பூர், அளுக்குளி, புதுக்கரைபுதூர், பா. நஞ்சகவுண்டன்பாளையம், கரட்டடிபாளையம், வெள்ளாப்பாளையம், மேவாணி ஆகிய கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்களில் மட்டும் யூரியா 125 டன், டி.ஏ.பி., 200 டன், 20:20 காம்ப்ளக்ஸ் 200 டன் தயார் நிலையில் உள்ளது. அனைத்து ரக விதை நெல் வகைகளும் வட்டார வேளாண் மையங்களில் விண்ணப்பம் பெற்று, பில் போட்டு முறைப்படிதான் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. தனியாருக்கு முறைகேடாக விற்பனை செய்ய வாய்ப்பில்லை.இவ்வாறு அவர் தெரிவித்தார். மார்க்கெட்டில் கிராக்கி ஏற்படும் நெல்லை பயிரிட்டால்தான் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். தற்போது கிராக்கியுள்ள ஏ.டி.டி., 16 ரக நெல்லை பயிரிடத்தான் கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் விரும்புகின்றனர்.
எனவே, கோபி பகுதி விவசாயிகள் விரும்பி கேட்கும் ஏ.டி.டி., 16 ரக விதை நெல்லை அதிகளவில் விற்பனை செய்ய மாவட்ட விவசாயத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் உரிமம் ரத்து வேளாண்துறை எச்சரிக்கை**

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என, வேளாண் துறை எச்சரித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில் அரசு நிர்ணயித்துள்ள விலையை விட கூடுதல் விலைக்கு உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் விற்கப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. கலெக்டர் சண்முகம் உத்தரவின்படி, உரக்கட்டுப்பாடு சட்டம் 1985ன் படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களில் சிறப்பு ஆய்வு குழுவினர் ஆய்வு செய்தனர். உரக்கட்டுப்பாடு சட்டத்தின் படி அனைத்து உர விற்பனை நிலையங்களிலும் உரங்களின் விலை குறிக்கப்பட்ட தகவல் பலகைகளை, பார்வைக்கு வைக்காத உர விற்பனை நிலையங்கள் 15 நாட்கள் உரம் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. உரம் வாங்கும்போது, வாங்கும் உரத்துக்கு விற்பனை ரசீது, விவசாயிகளின் முழு முகவரி,உரத்தின் விவரம், விற்பனை விலை ஆகியவற்றை தெளிவாக குறித்து ரசீதில் கையொப்பம் பெற்று, நகலை விவசாயிகளுக்கு வழங்கிட விற்பனையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகளை பின்பற்றாத உர

விற்பனை நிலையங்கள் மீது ஏதேனும் புகார் வரப்பெற்றால் அதை ஆய்வு செய்து கடும் நடவடிக்கை எடுப்பதுடன் உர உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும். இதே உத்தரவுகளை பூச்சி மருந்துகளை விற்பனை செய்யும் நிலையங்களும் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயத்தில் சந்தேகம் இருக்கா?ஒளிபரப்புக்கு 'டயல்' பண்ணுங்க...**

ஊட்டி: 'பொதிகை' தொலைக்காட்சியில் நடக்கும் விவசாயம் சார்ந்த ஆலோசனை நேரத்தில், விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:'பொதிகை' தொலைகாட்சியில், 29ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 1.00 மணி வரை விவசாயம் சார்ந்த ஆலோசனை நேரம், நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. விவசாயம் சார்ந்த ஆலோசனை நேரத்தில், விதைப் பரிசோதனை துணை இயக்குநர் சுப்பரத்தினம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கடன் முன்னுரிமை துறை (விவசாயம்) முதன்மை மேலாளர் ஜெகநாதன், நபார்டு வங்கி துணை பொது மேலாளர் பழனிசாமி, சுவாமிமலை மனித உரிமைகள் பாதுகாப்பு மையம், மாவட்ட ஊரக நுகர்வோர் ஆர்வலர் சுந்தரவிமல்நாதன், சென்னை உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையாளர்-1 முகமது அக்பர் பங்கேற்கின்றனர்.விவசாயம் சார்ந்த ஆலோசனை பெற விரும்புவோர், (044) 17073 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

**விவசாயிகளுக்கு மானியம்**

திருப்புல்லாணி: திருப்புல்லாணி வட்டாரத்தில் தென்னை பயிரிடுவதில் சொட்டு நீர் பாசனம், உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளை கடை பிடிக்கும் விவசாயிகளை கண்டறிந்து தென்னை வளர்ச்சி வாரிய திட்டத்தின் மூலம் பராமரிப்பு ஊக்கத்தொகையாக ஹெக்டேருக்கு 17 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டது. ஒன்பது பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து 35000 வழங்கப்பட்டது. இதை கலெக்டர் ஹரிகரன் வழங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் சத்தியமூர்த்தி, துணை இயக்குனர் சக்தி மோகன், உதவி இயக்குவர் கமால்தீன் உடன் இருந்தனர்.

**தரணி சர்க்கரை ஆலையில் நவீன கரும்பு அறுவடை இயந்திரம்**

சிவகிரி : தரணி சர்க்கரை ஆலையில் நவீன கரும்பு அறுவடை இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
தரணி சர்க்கரை ஆலையில் கரும்பு அறுவடை இயந்திரம் மூலம் கரும்பை அறுவடை செய்ய சோதனை ஓட்டம் நடந்தது. ராஜபாளையம் கோட்டத்தை சேர்ந்த ராம்குமார்ராஜா கரும்பு தோட்டத்தில் நடந்த இச்சோதனை ஓட்டத்தை தரணி சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் ராமலிங்கம் துவக்கி வைத்தார். ஏராளமான கரும்பு விவசாயிகள் மற்றும் தரணி சர்க்கரை ஆலையின் கரும்பு களப்பணியாளர்கள் இதனை பார்வையிட்டனர்.
கரும்பு அறுவடைக்கு அறுவடையாட்கள் பற்றாக்குறையாக உள்ளதால் கரும்பு அறுவடை செய்ய அதிக கூலி கொடுக்க வேண்டிய சூழ்நிலையை வெற்றி கொள்ள இந்த இயந்திர முறையில் கரும்பு சாகுபடிக்கு தீர்வு காணப்பட்டது. இந்த இயந்திரம் மூலம் கரும்பை அறுவடை செய்ய விரும்பும் விவசாயிகள் 6 அடி பாரில் கரும்பு நடவு செய்ய வேண்டும். வயலின் குறுக்கே உள்ள மரங்கள், பெரிய வரப்புகள் மற்றும் மேடுகள் ஆகியவற்றை அகற்றிவிட்டு நீளவாக்கில் பிரத்யோக பார் கலப்பையை கொண்டு 8 அடி அகலத்தில் நேர்கோட்டில் பார் அமைக்க வேண்டும்.
இந்த கரும்பு அறுவடை இயந்திரம் கரும்பு வயல்களின் அமைப்பை பொறுத்து மணிக்கு 60 முதல் 100 டன்கள் வரை கரும்பு அறுவடை செய்ய இயலும், இந்த இயந்திரத்தின் விலை சுமார் 2 கோடி ரூபாய் ஆகும். தேவைக்கேற்ப இன்னும் அநேக இயந்திரங்களை தரணி சர்க்கரை ஆலை கொள்முதல் செய்ய உள்ளது. இந்த கரும்பு அறுவடை இயந்திரத்தால்

கரும்பு விவசாயிகள் நிறைய பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்ய இருப்பதாக தெரிவித்தனர். ஏற்பாடுகளை தரணி சர்க்கரை ஆலை பொது மேலாளர் சந்திரசேகரன் மற்றும் கரும்பு மேலாளர் சுந்தரராஜன் செய்திருந்தனர்.

**தி.மலையை வறட்சி மாவட்டமாக அறிவிக்கணும்: கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

போளூர்: 'தி.மலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்' என கரும்பு விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் பேரவை கூட்டம், போளூரில் நடந்தது. இக்கூட்டத்துக்கு, மாவட்ட பொருளாளர் துரைசாமி தலைமை வகித்தார். ஏஐடியுசி மாவட்ட தலைவர் சண்முகம், நிர்வாக உறுப்பினர்கள் கோபி, ஏழுமலை, பழனி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். துணைத்தலைவர் சங்கர் வரவேற்றார். சங்கத்தின் மாநில துணை செயலாளர் பரமசிவம், மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், வட்டார தலைவர் நாராயணசாமி ஆகியோர் கலந்துகொண்டு, கரும்பு விவசாயிகளின் பல பிரச்னைகள் குறித்தும், அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கி பேசினர். பின்னர், புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. இதில் புதிய தலைவராக துரைசாமி, செயலாளராக சாமிக்கண்ணு, பொருளாளராக பழனி உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீர்மானங்கள்: போளூர் பகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளின் வெட்டு கூலியை தரணி சர்க்கரை ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்ள வேண்டும். டன் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும், கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் கரும்பு விவசாயிகளுக்கு கிணறு வெட்ட கடன் வழங்க வேண்டும், தரணி சர்க்கரை ஆலை மூலம் அனைத்து கரும்பு விவசாயிகளுக்கும் விதை கரும்புகளை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், போளூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகளுக்கு சுங்க வரி வசூல் செய்வதை தடுக்க வேண்டும். போளூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்.

தனி நபர்கள் பயனடையும் வகையில் பயிர் காப்பீடு திட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். தி.மலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க மாவட்ட செயலாளர்கள் ராஜேந்திரன், பாஸ்கரன், விவசாய தொழிலாளர் சங்கத்தின் வட்டார தலைவர் ராமலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். பழனி நன்றி கூறினார்.

**மானிய விலையில் இடுபொருட்கள்**

செய்யாறு: செய்யாறு மற்றும் திருமணி விரிவாக்க மையங்களில் மானிய விலையில், விவசாயத்துக்கு தேவையான இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் இதை பயன்படுத்திக் கொள்ளலாம் என வேளாண் உதவி இயக்குனர் சாந்தி கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: விதைகள்: நெல், உளுந்து, மணிலா, கம்பு, உர வகைகள்: ஜிப்சம், டிஏபி, ஜிங்க் சல்பேட், கருவிகள்: நுண்ணூட்ட கலவை கை தெளிப்பான், சேமிப்பு கலன், புளூ ரோட்டஸ்கிட் மற்றும் செம்மை நெல் சாகுபடி திடல் அமைக்கவும் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், விவரம் அறிய 98423 17805 என்ற செல்போன் நம்பரை தொடர்பு கொள்ளலாம்.

---

**வீட்டுக்கு ஒரு மரக்கன்று வழங்கும் திட்டம் துவக்கம்**

செங்கம்: செங்கம் டவுன் தளவாய்நாய்க்கன்பேட்டையில், தி.மலை அமைதி அறக்கட்டளை சார்பில் வீட்டுக்கொரு மரக்கன்று வழங்கும் திட்டமான மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

---

இந்நிகழ்ச்சிக்கு, செங்கம் டவுன் பஞ்., தலைவர் பத்மா முனிக்கண்ணு தலைமை வகித்தார். கவுன்சிலர் ராஜேஸ்வரி மாணிக்கம் முன்னிலை வகித்தார். அமைதி அறக்கட்டளை இயக்குனர் ராஜாராம் வரவேற்றார். பேரூராட்சி துணைத்தலைவர் அப்துல்சர்தார், ஓய்வுபெற்ற வங்கி மேலாளர் முருகையன், அறிவொளி அறக்கட்டளை இயக்குனர் செங்கண்மா முருகு, கல்வியாளர்கள் மாணிக்கம், சாரதா, சுப்ரமணியன், நகர காங்கிரஸ் தலைவர் கலிமுல்லா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

செங்கம் வனச்சரக அலுவலர் ஜெயராஜ், 400 மரக்கன்றுகளை வழங்கி பேசியதாவது: இப்போது மலை, காடுகளில் சில சமூகவிரோதிகளால் மரங்கள் அழிக்கப்படுகின்றன. மேலும், இயற்கையின் சீற்றத்தாலும் மரங்கள் அழிந்து வருகின்றன. மரங்கள் அழிவதன் காரணமாகத்தான் பூமியில் அதிக அளவு வெப்பம் வீசுகிறது. எனவே, விவசாயிகள் தங்களது நிலங்களின் மத்தியில் உள்ள வரப்புகளில் மரங்களை நட வேண்டும். மேலும், பிள்ளைகள் வீட்டுக்கொரு மரக்கன்றுகளை நட வேண்டும். இப்போது தலைவர்கள் பிறந்த நாளில் மரக்கன்றுகள் நடுவது போல், பொதுமக்கள் தங்களது வீட்டில் நடக்கும் குழந்தைகள் பிறந்தநாள் விழா, திருமணநாள் விழா போன்ற நிகழ்ச்சிகளின் நினைவாக மரக்கன்றுகளை நட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், வனவர் குப்புசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். கவுன்சிலர் பரிதாநூருல்லா நன்றி கூறினார்.

**கோடையில் விவசாய பணிகளை காலை 8 மணிக்குள் முடிக்கணும்: விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை ஆலோசனை**

வேலூர்: 'விவசாயிகள் தங்கள் நிலங்களில் மேற்கொள்ளும் பணிகளை காலை 8 மணிக்குள்ளும், மாலை 4 மணிக்கு பிறகும் செயல்படுத்த வேண்டும்' என வேலூர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடந்த 50 ஆண்டுகளாக பூமியின் வெப்பம் ஒவ்வொரு பத்தாண்டுக்கும் ஒரு டிகிரி சென்டிகிரேடு அதிகரித்துக் கொண்டே உள்ளது. அதேபோல் கோடை காலம் அதிகரித்தும், மழைக்காலமும், குளிர்காலமும் குறுகிக்கொண்டு இருக்கிறது. இதற்கு பசுமை கூடார விளைவு என்று பெயர். கரியமில வாயு, நீராவி, மீத்தேன், நைட்ரஜன் ஆக்ஸைடு மற்றும் குளோரோ புளோரோ கார்பன் போன்ற வாயுக்கள் பூமியின் மேல் ஒரு 'பசுமைக் கூடாரம்' போல் செயல்பட்டு சூரியனின் வெப்பசக்தி பூமியை விட்டு வெளியேறாதபடி செய்கின்றன. இதனால் பூமி வெப்பமடைவது மிக அதிகமாக நடக்கிறது. உலகில் பரவியுள்ள தொழிற்சாலைகளில் இருந்தும், மோட்டார் வாகனங்கள், குளிர் சாதன பெட்டிகளில் இருந்தும் இந்த வகையான பசுமை கூடார வாயுக்கள் வெளியேறுகிறது.

இதன் விளைவால் ஏற்படும் பூமியின் வெப்பத்தால் பனிமலைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து, நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. இதேபோல் குளிர்காலம் குறைந்தும், கோடைகாலம் அதிகரிப்பது மட்டுமல்லாமல் அதிக வெப்பமானதாகவும் மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிக மழை இல்லாததாலும், அதிக வெப்பத்தினாலும் பயிரின் விளைச்சல் பாதிப்படையும் நிலை உள்ளது. வளிமண்டலத்தில் இருக்கும் பசுமை கூடார வாயுக்களை, மரங்கள் நடுவதால் குறைக்கலாம். மேலும் பெட்ரோலிய எரிபொருட்களின் உபயோகத்தை குறைப்பதாலும் பசுமை கூடார வாயுக்களின் அளவை குறைக்கலாம்.

இப்போதைய கோடை காலத்தில் அதிக வெப்பத்தினால் விதை முளைக்காமலும், முளைத்தாலும் பயிர் வளராமலும், சூரிய கதிர்களால் பயிர் மஞ்சத்தன்மை பெற்றும், கருகியும், வளர்ச்சி குன்றியும், விளைச்சல் குறையவும் வாய்ப்புள்ளது.

ஆகவே விவசாயிகள், வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய சிறுதானியப் பயிர்கள் போன்றவற்றையே கோடை காலத்தில் பயிர் செய்வது நல்லது. விவசாயிகள் தங்கள் நிலங்களில் செயல்படுத்தக்கூடிய செயல்களை காலை 8 மணிக்குள்ளாகவும், மாலை 4 மணிக்கு பிறகும் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**வெங்காயம் விலை குறைவு**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி., பகுதியில் வெங்காயம் விலை குறைந்துள்ளது.ஸ்ரீவி., மல்லி, பிள்ளையார்நத்தம், தொட்டியப்பட்டி, நாகபாளையம், வங்காருபட்டி, அச்சம்தவிர்த்தான் பகுதி விவசாயிகள் கிணறுகளில் கிடைத்த ஓரளவு தண்ணீரை கொண்டு வெங்காயம் பயிர் செய்தனர். டிசம்பர், ஜனவரியில் அறுவடையும் செய்தனர். அப்போது 60 கிலோ கொண்ட மூடைக்கு 800 முதல் 1,200 ரூபாய் வரை விலை போனது. பொதுவாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்து காணப்படும். இதை கணக்கிட்டு பெரும்பான் மையான விவசாயிகள் குறைந்தளவு வெங்காயத்தை மட்டும் டிசம்பர், ஜனவரியில் விற்பனை செய்தனர்.

தற்போது வெங் காயத்தின் விலை, அறுவடை காலத்தை காட்டிலும் மிகவும் குறைந்த விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர். இதுகுறித்து விவசாயி சுராங்கனி கூறியதாவது: கடந்தாண்டு இதே காலத்தில் மூடைக்கு ஆயிரத்து 600 ரூபாய் வரை இருந்தது. தற்போது ஒட்டன்சத்திரம், சத்திரம் போன்ற பகுதிகளில் இருந்து அதிகளவு வெங்காயம் ஸ்ரீவி., பகுதிக்கு வந்து கொண்டிருக் கிறது. தற்போது மூடைக்கு 750 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. விலை உயர்வை கணக்கிட்டு வெங்காயத்தை பதப்படுத்தியிருந்த விவசாயிகள் கடும் நஷ்டத்திற்கு ஆளாகி உள்ளனர். ஏற்கனவே ஈரமான வெங்காயத்தை பதப் படுத்தும் போது அதன் எடையில் குறைவு ஏற்படும். தற்போது விலையும் குறைந்து போனதால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளோம், என்றார்.

---

**தினத் தந்தி**

***கோதுமை உற்பத்தி அதிகரிப்பால் பணவீக்க விகிதம் குறைய வாய்ப்பு மாண்டேக் சிங் அலுவாலியா நம்பிக்கை***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*கோதுமை உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. மேலும் உணவு தானியங்கள் கையிருப்பும் அதிகமாக உள்ளது. இதனால் அடுத்த 3 மாதங்களில் பணவீக்க விகிதம் குறைய வாய்ப்புள்ளது என திட்டக் குழு துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*
*பாரத ரிசர்வ் வங்கி*
*பாரத ரிசர்வ் வங்கி (ஆர்.பீ.ஐ), 2010–11–ஆம் நிதி ஆண்டுக்கான அதன் கடன் கொள்கை ஆய்வறிக்கையில், வங்கிகள் குறைந்த கால அடிப்படையில் அதனிடமிருந்து பெறும் கடன் மற்றும் வங்கிகளிடமிருந்து குறைந்த கால அடிப்படையில் அது பெறும் கடனுக்கான வட்டி விகிதங்களை (ரெப்போ ரேட் மற்றும் ரிவர்ஸ் ரெப்போ ரேட்) தலா 0.25 சதவீதம் உயர்த்தியது.*
*இதே போன்று வங்கிகள், அவை திரட்டும் டெபாசிட் தொகையில் குறிப்பிட்ட சதவீதத்தை சட்டப்படி பாரத ரிசர்வ் வங்கியிடம் இருப்பு வைக்க வேண்டிய ரொக்க இருப்பு விகிதமும் (சி.ஆர்.ஆர்) 0.25 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. அதாவது 5.75 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனையடுத்து புழக்கத்திலிருந்து ரூ.12,500 கோடியை ரிசர்வ் வங்கி எடுத்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது.*
*10 சதவீதமாக உயரும்*
*மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம், சென்ற மார்ச் மாதத்தில் 9.9*

*சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, விரைவில் 10 சதவீதமாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பாரத ரிசர்வ் வங்கி இதனை, நடுத்தர கால அடிப்படையில் 3 சதவீத அளவில் நிலைநிறுத்த இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. எனினும் இதற்காக இவ்வங்கி தீவிரமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை.*
*ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்ட நிதிக் கொள்கைஆய்வறிக்கையில், வரும் 2011–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பணவீக்கம் 5.5 சதவீத அளவிற்கே இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. பருவமழை சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, வேளாண் விளைபொருள்கள் விலை அதிகரிக்க வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.*
*மத்திய அரசும் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக அரிசி (பாசுமதி நீங்கலாக), பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் வகைகள் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. மேலும் அத்தியாவசிய உணவு தானியங்கள் இறக்குமதி மீதான வரியை குறைத்துள்ளது.*

**கூடலூர் பகுதியில் இஞ்சி பயிரிட விவசாய நிலங்கள் தயார் செய்யும் பணி தீவிரம்**

*கூடலூர், ஏப்.29–*
*கூடலூர் பகுதியில் மழை காலங்களில் பணப்பயிரான இஞ்சியை பயிரிடுவதற்காக விவசாய நிலங்களை தயார் செய்யும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.*
*விவசாயிகள்*
*நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் காலி பிளவர், மேரக்காய், கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு உள் ளிட்ட மலைக்காய்கறிகள் அதிகளவு பயிரிடப்பட்டு வருகின்றன.*
*இதேபோல் மாவட்டத்தின் எல்லை பகுதியில் உள்ள கூடலூர், பந்தலூர் தாலுக பகுதியில் காரட், பீட்ரூட், உருளைக் கிழங்கு தவிர மற்ற காய்கறிகள் பயிரிடப்படுகின் றன.*
*இதுதவிர கூடலூர் பகுதியில் மலை காய்கறிகளுக்கு இணை யாக சம வெளி பயிரான நெல், புடலங்காய், பாகற் காய், கத்தரிக்காய், பஜ்ஜி மிளகாய், வெண்டைக்காய், முட்டைக் கோஸ், மரவள்ளி கிழங்கு போன்றவை பயிரிடப்படு கின்றன. ஒவ்வொரு காலநிலை களுக்கு ஏற்ப பல் வேறு வகை யான காய்கறி களை கூட லூர் விவசாயிகள் பயி ரிட்டு பொருளா தாரத்தை பெருக்கி கொள்வதில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.*
*தற்போது கூடலூர் பகுதியில் அனல் பறக்கும் வெயில் அடித்து வருகின்ற சூழ்நிலை யில் பாகற்காய், முள்ளங்கி, மிளகாய், கத்தரிக்காய், பூசணிக்காய் ஆகிய பயிர்களை பயிரிட்டு அறுவடை செய்து வருகின்றனர்.*
*நிலங்களை மிருதுவாக்கும் பணி*
*வருகிற மே மாத இறுதியில் கூடலூர் பகுதியில் மழை காலம் தொடங்கி விடும். கோடை காலத்தில் விளையக் கூடிய பயிர்களை பயிரிடுவதில் கவனம் செலுத்தி வந்த கூடலூர் விவசாயிகள், மழை காலங்கள் தொடங்கு வதற்கு முன்பு மழை காலத்தில் விளையக்கூடிய பணப் பயிரான இஞ்சி பயிரிடுவதில் அக்கறை செலுத்த தொடங்கி விடுவர். இதற்கு முன் ஏற்பாடாக விவசாய நிலங்களை கொத்தி (மிருதுவாக்கும்) உலரவிட்டு வருகின்றனர். இதனால் ஏக்கர் கணக்கிலான நிலங்களை கொத்தும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.*
*இஞ்சி விவசாயம்*
*மே மாத இறுதியில் மழை பெய்ய தொடங்கியவுடன் இஞ்சியை பயிரிடும் பணியை கூடலூர், பந்தலூர் விவசாயிகள் தொடங்கி விடுகின்றனர். பின்னர் 6 மாத விளைச்சலுக்கு பிறகு இஞ்சி அறுவடை செய்து அதிக லாபத்தை பெறுகின்றனர் கூடலூர் விவசாயிகள்.*



# வேளாண்மை செய்திகள்

## மூட்டுவலி நோய்க்கு மருந்தாக பயன்படும் அஸ்வகந்தி



இயற்கை அளித்துள்ள மருத்துவ பயிர்கள் ஏராளம். நம் நாட்டில் வாழ்ந்த முன்னோர்கள் மருத்துவ பயிர்களின் பலன்களை நன்கு அறிந்து கொண்டு மூலிகை செடிகளை கொண்டு நோய்களை குணப்படுத்தினார்கள். இந்தியாவை பொறுத்த வரை 45 வகையான மருத்துவ பயிர்கள் பயிரிடப்படுகிறது. விவசாயத்தில் மருத்துவபயிராக பயிரிடப்படும் அஸ்வகந்தி மருத்துவ குணம் கொண்ட பயிராகும்.

### மானாவாரி பயிர்

மானாவாரியாக பயிராகும் அஸ்வகந்தி செடியானது வகைகளுக்கு ஏற்றார்போல் ஒரு அடியில் இருந்து 6 அடி வரை வளரும் தன்மை கொண்டது. சுமார் 2 அடி வரை கிளைகள் படர்ந்து வளரும் தன்மை கொண்டது. இளம் பச்சை நிறத்தில் பூக்கும் இதன் பூக்கள் இலைகளின் கணுக்களில் காணப்படும். காய்முற்றி பழுத்த பின் மஞ்சள் அல்லது சிவப்பு நிறத்தில் காணப்படும். இதன் வேர்கள் பருமனாகவும் அதிகபட்சமாக மூன்று அடிநீளம் வளரும் தன்மை கொண்டது.

அஸ்வகந்தி செடியை மானாவாரியாக பயிரிடலாம். மண் வளம் குறைந்த தரிசு, களர்,உவர் மற்றும் மணற்பாங்கான நிலங்கள் கூட சாகுபடிக்கு ஏற்றவை. வெப்ப மண்டல பயிராக பயிரிடும் இந்த செடிக்கு ஆண்டு தோறும் 60 முதல் 80 செண்டிமீட்டர் மழையளவு இருத்தல் அவசியம். ஆயிரம் மீட்டர் உயரம் உள்ள மலைப்பிரதேசங்களிலும் கூட இந்த செடியை சாகுபடி செய்யலாம்.

### நேரடி விதைப்பு

மானாவாரி நேரடி விதைப்புக்கு ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவை. நாற்றாங்கால் விதைப்பு எனில் ஏக்கருக்கு 2.5 கிலோ விதை போதுமானது. நேரடி விதைப்புக்கு ஜூன் மற்றும் ஜூலை மாதங்கள் ஏற்றவை. நாற்றாங்கால் விதைப்புக்கு ஏப்ரல் மே மாதங்கள் சிறந்தது. இதற்காக 1.2 மீட்டர் முதல் 3 மீட்டர் அளவு மேடைபாத்தி அமைத்து நேர் கோடுகளில் விதைக்க வேண்டும். விதைகள் 10 நாட்களில் முளைத்து விடும். 25 நாட்களில் நன்றாக வளர்ந்த நாற்றுக்களை பிடுங்கி நடவு செய்யலாம்.

மானாவாரி பயிராக இருப்பின் 25 முதல் 30 நாட்களில் வளர்ந்த நாற்றுக்களை 60 செண்டி மீட்டர் இடைவெளியில் இருக்குமாறு கலைத்து விட வேண்டும். இறவை பயிராக சாகுபடி செய்யும் போது நாற்றுக்களை 2 அடி இடைவெளியில் பார்கள் அமைத்து அவற்றை 60 செண்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

### உரமேலாண்மை

அஸ்வகந்தி செடிக்கு ஏக்கருக்கு 10 டன் மக்கிய தொழு உரத்தை அடி உரமாக இட வேண்டும். தரம் இல்லாத மண் வகைகளில் பயிர் செய்ய வேண்டும் எனில் ஒரு ஏக்கருக்கு 40 கிலோ தழைச் சத்து, 60 கிலோ மணிச் சத்து மற்றும் 40 கிலோ சாம்பல் சத்துதரவல்ல உரங்களை இட வேண்டும். தழைச்சத்தை இரண்டு சமபாகங்களாக பிரித்து அடியுரமாகவும் மற்றும் நாற்று நட்ட 30 நாட்களிலும் இடலாம்.

நாற்றுக்களை நடவு செய்த 15-வது மற்றும் 30-வது நாட்களில் நீர் பாசனம் செய்தால் போதும். செடிகளை நட்ட 30 மற்றும் 50-வது நாட்களில் களை எடுத்தல் அவசியம். பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் அளவுக்கு பூச்சி மற்றும் நோய்கள் அஸ்வகந்தி செடியை தாக்குவது இல்லை.

### விதை நேர்த்தி

வாடல் நோய் இளம் நாற்றுக்களை தாக்கும். இந்த நோய் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றின் ஈரப்பதம் மற்றும் வெப்ப நிலை அதிகரிக்கும் போது அதிகரிக்கும். இதை தடுக்க டெவிஸ்டின் மருந்தை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதைத்த 150 நாள் முதல் 170 நாட்களில் வேர்களை அறுவடை செய்யலாம். வேர்களின் கனம் மற்றும் நீளத்தை கொண்டு வேர்கள் பல தரங்களாக பிரிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 200 கிலோ முதல் 250 கிலோ உலர்ந்த வேர்களும், 25 கிலோ விதைகளும் மகசூலாக கிடைக்கும். ஆடு ஒன்றுக்கு சராசரியாக 75 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை நிகர லாபம் பெறலாம்.

### மருத்துவ குணம்

மருத்துவ குணம் கொண்ட மூலிகை பயிராக பயன்படும் அஸ்வகந்தி மன உளைச்சலை கட்டுப்படுத்த மருந்தாக பயன்படுகிறது.

மூட்டு வலிக்கு சிறந்த வலி நிவாரணியாக பயன்படுகிறது. நரம்பு தளர்ச்சி மற்றும் உயர் ரத்த அழுத்த நோயை கட்டுப்படுத்த உதவுகிறது. மேலும் பாலுணர்வை தூண்டும் ஊக்கியாகவும் அஸ்வகந்தி பயன்படுகிறது.

தகவல்:- **ஏ.கபீர்**, வேளாண்மை ஆலோசகர், வேளாண்மை நிலையம், தாராபுரம்.

## தென்னையில், குரும்பைகள்- இளங்காய்கள் உதிர்வதை தடுப்பது எப்படி?

### தென்னை ஆராய்ச்சி நிலையம் விளக்கம்



தென்னை பயிர், தேங்காய் விளைச்சலுக்காக மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது. தேங்காய் உற்பத்தியில் குரும்பைகள் மற்றும் இளங்காய்கள் உதிர்வது விவசாயிகளுக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது. இதனால் மகசூல் அதிக அளவில் பாதிக்கப்படுகிறது.

#### குரும்பைகள் உதிர்வது ஏன்?

குரும்பைகள் உதிர்வது என்பது பெண் பூக்கள் அதிக எண்ணிக்கையில் கருவுறாத நிலையிலும், கருவுற்ற நிலையிலும் உதிர்வதாகும். அதாவது பூ பூத்ததில் இருந்து முதிர்ச்சி அடையும் வரை எந்த நிலையிலும் பூக்கள் உதிர்ந்து விட வாய்ப்பு உள்ளன. பொதுவாக தென்னையில் இளம்பருவத்தில் பெண்பூக்கள் கருவுற்ற இரு மாதங்களுக்கு பிறகு அதிகமாக உதிர்வதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

குரும்பைகள் உதிர்வு 3 முதல் 80 சதவீதம் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 83 சதவீதமும், மார்ச் மற்றும் மே மாதங்களில் 78 சதவீதமும், டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை 39 சதவீதமும் குரும்பைகள் உதிர்வதாக கண்டறியப்பட்டு உள்ளது. தாவர உடற் செயலியல் குறைபாடு, மண்ணின் களர்-உவர் தன்மைகள், மண்ணில் ஊட்டச்சத்து பற்றாக்குறை, நீர் நிர்வாக குறைபாடு, மகரந்த சேர்க்கை குறைபாடு, பயிர் வினை ஊக்கிகளின் குறை மற்றும் தேவை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் போரான் குறைபாடு போன்றவை குரும்பைகள் உதிர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றன.

#### தடுப்பது எப்படி?

பூ தண்டின் அடிப்பகுதியின் திசு உலர் தன்மை மற்றும் சூல் பைகளின் திசு உலர் தன்மை ஏற்பட்டு பூக்கள் உதிர்கிறது. ஊட்டச்சத்தை சரியான முறையில் எடுத்து கொள்ளததால் தென்னை பூக்கள் சரியான முறையில் கருவுறுவதில்லை. நெட்டை வகை தென்னை மரங்களில் குறைவான குரும்பை உதிர்வு ஏற்படுவது கண்டறியப்பட்டு உள்ளது. அமிலத்தன்மை அதிகம் இருக்கும் மண்ணில் ஜிப்சம் இட்டு உளர்-களர் தன்மைகளை சரி செய்யலாம்.

ஊட்டச்சத்து குறைபாட்டை சரி செய்ய யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, மூரியேட் ஆப் பொட்டாஷ் 2 கிலோ ஆகியவற்றை நன்கு மக்கிய 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒவ்வொரு மரத்துக்கும் இட வேண்டும். உரமிடும் அளவை அதிகரித்து நல்ல வடிகால் வசதியுடன், நன்றாக நீர்பாசனம் செய்ய வேண்டும்.

#### இளங்காய்கள் உதிர்வை தடுக்க....

போதுமான நுண்ணூட்ட சத்துக்கள் கிடைக்காத கன்றுகள் வளர்ச்சி குறைந்து இலைகள் மஞ்சள் நிறமாகிறது. நவம்பர் மாதம் முதல் மே மாதம் வரை தொடர் நீர்பாசன முறையை பின்பற்றினால் இந்த பிரச்சினையை சமாளிக்கலாம். தென்மேற்கு பருவ காலங்களில் பைடோப்தோரா பாலிமிவோரா பூசணம் இளங்காய் உதிர்வுக்கு காரணமாகிறது. 1 சதவீத போர்டா கலவையை பருவமழைக்கு முன்னும் பின்னும் தெளிக்க வேண்டும். மரத்தின் கொண்டை பகுதிகளை சுத்தம் செய்ய வேண்டும்.

டிடிடி மற்றும் குளோரிடேன் பூச்சிக்கொல்லியை பயன்படுத்த வேண்டும். பாராக்வாட்களைக்கொல்லியை தண்டின் அடிப்பகுதியில் இட வேண்டும். எறும்பு புற்றுகளை கட்டுப்படுத்த டை-எல்ட்ரின் தண்டின் அடிப்பகுதியில் இட வேண்டும். இந்த முறைகளை விவசாயிகள் பின்பற்றினால் தென்னையில் குரும்பைகள் மற்றும் இளங்காய்கள் உதிர்வதை தடுக்கலாம். மேலும் உற்பத்தியை அதிகரித்து அதிக அளவில் லாபம் பெறலாம்.

-தகவல்: தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்.